**13.11.2025.**

**MCOP.No.9/2022**
**ம.சா. 1: முருகேசன்**
**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை. எனக்கு இந்த விபத்து போன் மூலமாக தான் சொன்னார்கள். இந்த விபத்து இரவு சுமார் 9 மணி இருக்கும்போது தகவல் கிடைத்தது. நான் இந்த விபத்து நடந்து 1 நாள் கால தாமதாக தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இது சம்மந்தமாக கால தாமதத்திற்கான விளக்கம் தரப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் துறை இன்ஜினியரிங் வொர்க் ஷாப்பில் வேலை பார்த்து விட்டு வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது ஏற்பட்டது. என் மகன் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி எங்கள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். எனது மகன் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயம் என் மகன் மீது மோதியது சேலம் to சென்னையை நோக்கி வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் 30 J 5425 என்று குறிப்பிடப்பட்டுள்ளது 30 T 5425 வாகனம் தான் என்று சொன்னால் தெரியவில்லை. இந்த விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டியதால் தான் தலையில் அடிபட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

2) இருட்டில் தலைக்கவசம் போடாமல் எனது மகன் கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயம் எனது மகன் வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் உள்ளது (ம.சா.ஆ.14). விபத்து சமயம் எனது மகன் இன்ஜீனியரிங் ஷாப்பில் வேலை பார்த்து வந்தார். டிப்ளமோ முடித்து மகாராஜா கல்லூரியில் இன்ஜினியரிங் முடித்து வெளிநாட்டில் வேலை பார்த்து மீண்டும் இந்தியா வந்து வேலை செய்து வந்தார். வெளிநாட்டில் 1-1/2 வருடம் வேலை பார்த்தார்.

3) விபத்து சமயத்தில் எனது மகன் ரூ.30000/- சம்பளம் வாங்கினார். நான் விபத்திற்கு அதிக இழப்பீடு கோருவதற்காக நான் கேட்டுகொண்டதன் அடிப்படையில் அதிக சம்பளம் காண்பித்து ம.சா.ஆ.23 பெற்ற நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இன்ஜீனியரிங் வொர்க் ஷாப்பில் நான் கேட்டுகொண்டதன் அடிப்படையில் மிகைப்படுத்தி சம்பள சான்று வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகனின் வயது 28 ஆகும். எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. இந்த விபத்திற்கு எனது மகனின் கவனக்குறைவும் தலைக்கவசம் அணியாமல் இருந்தது தான் காரணம் என்றும் எனவே நான் பல்வேறு தலைப்புகளில் நான் கோரி உள்ள இழப்பீடு மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கு நிரந்தரமாக வேலை இல்லை என்றும் இழப்பீடு கோருவதற்காக மிகைப்படுத்தி இழப்பீடு கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:43:02 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**